**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, தூத்துக்குடி**
**முன்னிலை : திருமதி. ப. சுமதி.,எம்.எல்,**
**நீதித்துறை நடுவர் எண் 1,**
**தூத்துக்குடி**
**2025 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 1694/2023**
**CNR No TNTT02-018551-2023**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையம் (Police Station) | தெற்கு காவல் நிலையம் |
| 2. | குற்ற எண் (Crime Number of the offence) | 776/2019 |
| 3. | எதிரியின் பெயர் (Name of the Accused) | முருகன், (58/2023)<br>த/பெ. முத்துவீரப்பன்பிள்ளை,<br>டிரைவர்,<br>9/11, மேலப்பிள்ளையார் கோவில் தெரு,<br>முடிவைத்தானேந்தல்,<br>தூத்துக்குடி. |
| 4. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 5. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 6. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 7. | எதிரிகளின் வயது (Age) | |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Date of occurence) | 24.12.2019 |
| 9. | குற்ற முறையீட்டு தேதி (Complaint date) | 24.12.2019 |
| 10. | மன்றம் வந்த நாள் (Received by the court) | 31.12.2019 |
| 11. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Apprehension date) | 31.12.2019(காவல் நிலைய பிணை) |
| 12. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Released on Bail) | -- |
| 13. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of trial) | 21.02.2024 |
| 14. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of trial) | 15.04.2025 |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | 16.04.2025 |
| 16. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது | முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 279, |



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:00 +0530

<table>
<tr><td></td><td>குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of copy of Judgment or finding on Accused)</td><td>304(A)ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று தீர்மானிக்கப்பட்டு, எதிரி இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்றவாளிகள் என கு.வி.மு.ச. 248(2) ன்படி இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.<br><br>இறுதியாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து குவிமுச பிரிவு 255(2)ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டு, தண்டனை குறித்து எதிரியிடம் போதுமான கால அவகாசம் கொடுத்து வினவிய போது, எதிரி தனக்கு 60 வயது ஆகிவிட்டது என்று கூறி தண்டனையை குறைத்து தரும்படி கோரினார்.<br>எதிரி மீதான இதச பிரிவு 304(A)ன் படியான குற்றத்திற்கு ஆறு மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனையும், ரூ. 5000/- அபராதமும், அபராதத்தை கட்ட தவறினால் ஒரு மாதம் சாதாரண சிறைத்தண்டனையும் விதிக்கப்படுகிறது.<br><br>இதச பிரிவு 279ன் கீழான குற்றத்திற்கான கூறுகள் இதச பிரிவு 304(A) ன் கீழ் உள்ளடங்கி வருவதால் இதச பிரிவு 279 ன் கீழான குற்றத்திற்கு தனியாக தண்டனை வழங்கப்படவில்லை.</td></tr>
<tr><td>17.</td><td>குவிமுச பிரிவு 313ன் கீழ் எதிரிகளை விசாரணை செய்த நாள் (Date of examination of accused U/s 313 Crpc)</td><td>15.04.2025</td></tr>
<tr><td>18.</td><td>சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் (Date of examination in chief and cross examination of witnesses)</td><td><table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>25.06.2024</td><td>25.06.2024</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>25.06.2024</td><td>25.06.2024</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>25.06.2024</td><td>25.06.2024</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>30.07.2024</td><td>30.07.2024</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>30.07.2024</td><td>30.07.2024</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>18.10.2024</td><td>18.10.2024</td></tr>
</table></td></tr>
</table>



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:07 +0530

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td>அ.சா.7</td><td>16.11.2024</td><td>16.11.2024</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>05.02.2025</td><td>05.02.2025</td></tr>
<tr><td>அ.சா.9</td><td>12.02.2025</td><td>12.02.2025</td></tr>
<tr><td>அ.சா.10</td><td>19.03.2025</td><td>19.03.2025</td></tr>
<tr><td>அ.சா.11</td><td>08.04.2025</td><td>08.04.2025</td></tr>
</table>
</td></tr>
<tr><td>19.</td><td>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</td><td>24.08.2023</td></tr>
<tr><td>20.</td><td>எதிரி நீதிமன்ற காவலில் இருந்த விபரம் (Period of Remand of Accused)</td><td>எதிரி காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார்.</td></tr>
</table>



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:13 +0530

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, தூத்துக்குடி**
**முன்னிலை : திருமதி. ப. சுமதி.,எம்.எல்,**
**நீதித்துறை நடுவர் எண் 1,**
**தூத்துக்குடி**
**2025 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 1694/2023**
**CNR No TNTT02-018551-2023**

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
தெற்கு காவல் நிலையம்
குற்ற எண் – 776/2019 **.... குற்றமுறையீட்டாளர்**

**/எதிர்/**

முருகன், (58/2023)
த/பெ. முத்துவீரப்பன்பிள்ளை,
9/11, மேலப்பிள்ளையார் கோவில் தெரு,
முடிவைத்தானேந்தல்,
தூத்துக்குடி. **....எதிரி**

இவ்வழக்கு கடந்த 24.08.2023 ம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 15.04.2025 இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக கற்றறிந்த உதவி வழக்கறிஞர் நிலை II அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திரு.P. பிள்ளைவிநாயகம், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**1. புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற பத்திரிக்கையின் சுருக்கம்**

கடந்த 24.12.2019 ம் தேதி 18.00 மணி அளவில் சாட்சி 1 ஸ்ருதி தனது கணவரான இவ்வழக்கில் காயம்பட்டு இறந்துபோன மோகன் என்பவருடன் வேலை முடித்து TN69 BH 2738 YAMAHA FASINO என்ற இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு செல்வதற்காக தூத்துக்குடி தெற்கு பீச் ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக சென்று ரோச் பார்க் அருகில் உள்ள குடையின் அருகில் வண்டியை நிறுத்தி அங்கு அமர்ந்து



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:18 +0530

பேசிக்கொண்டு இருந்தவர்கள் பின்பு சுமார் 19.00 மணி அளவில் மோகன் சிக்கன் வாங்கிவிட்டு வீட்டிற்கு செல்வோம் என்று சொல்லி வண்டியில் தெற்கு போய் வடக்காக U TURN போட்டு திரும்பும் போது படகு குழாம் அருகில் தெற்கிலிருந்து வடக்காக வந்த TN 72 N 1422 புதிய துறைமுகத்தில் இருந்து தூத்துக்குடிக்கு செல்லும் அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் முருகன் அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மோகனின் இருசக்கர வாகனத்தில் மோதியதில் மோகனுக்க இடது காது அருகில் சிதைந்த காயம், இடது கழுத்தில் சிராய்ப்பு காயம், இடது கழுத்தில் வீக்க காயம், இடத கண்ணுக்கு கீழ் இரத்தக்காயம், நாடியில் இரத்தக் காயம், கீழ் உதடு அருகில் இரத்த காயம், வலது கை மூட்டிக்கு கீழ் சிராய்ப்பு காயம், தலையின் பின்புறம் இரத்த காயத்தை உண்டுபண்ணிய குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தெற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளரால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிரிக்கு நகல் வழங்குதல் :</u>

அழைப்பாணையை பெற்றுக்கொண்ட இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான போது 21.02.2024 ம் தேதியன்று குவிமுச பிரிவு 207 ன் படி அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்கள் மற்றும் குற்றப்பத்திரிக்கையின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

3. <u>எதிரிக்கு அரசு தரப்பு வழக்கை விளக்கிக் கூறுதல்:</u>

நகல்களை பெற்றுக்கொண்ட எதிரிக்கு 05.03.2024 தேதியன்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை திறந்த நீதிமன்றத்தில் தமிழில் விளக்கிக் கூறி எதிரி மீது வனையப்பட்ட இதச பிரிவு 279, 304(A)ன் படியுமான குற்றச்சாட்டுகள் கூறி வினவிய போது எதிரி தன் மீதான குற்றச்சாட்டினை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

**4.** அரசு தரப்பில் மொத்தம் 16 சாட்சிகள் பட்டியலிடப்பட்டும், அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:23 +0530

5. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம் :</u>

**கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 திருமதி. ஸ்ருதி தனது முதல் விசாரணை சாட்சியத்தில்** தான் சம்பவத்தின் போது தூத்துக்குடி மாவட்டம் கோவில் பிள்ளை தெருவில் வசித்து வந்தேன், தனது கணவர் இறப்பிற்கு பின்பு தற்போது தனது தாய், தந்தையாருடன் கேரளாவில் வசித்து வருகிறேன், தனது கணவருக்கு சொந்த ஊர் திருநெல்வேலி, தானும், மோகனும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம், தானும், தனது கணவர் மோகனும் தூத்துக்குடி ல் உள்ள ஜிபிஆர் ரிசோர்சஸ் என்ற பிரைவேட் கம்பெனியில் வேலை பார்த்தோம், தான் அசிஸ்டன்ட் பிசினஸ் கோ ஆர்டினேட்டர் ஆகவும், தனது கணவர் அட்மின் பிரிவிலும் வேலை பார்த்து வந்தோம், கடந்த 2019–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24–ம் தேதி தங்கள் அலுவலகத்தில் இருந்து தங்களது வீடு இருந்த கோவில்பிள்ளை நகருக்கு மாலை 6.00 மணிக்கு tN 69 BH 2738 என்ற யமஹா பேசினோ என்ற இரு சக்கர வாகனத்தில் கிளம்பினோம், பீச் சோட்டில் கொஞ்ச நேரம் நிப்பாட்டி இருந்தோம், இரவு 7.00 மணி அளவில் சிக்கன் வாங்கலாம் என்று வடக்கில் இருந்து தெற்காக செல்லக்கூடிய ரோட்டில் திரும்பி சிக்கன் வாங்குவதற்காக இருவரும் சென்றோம், தன்னை ரோட்டில் நிற்க சொல்லிவிட்டு வண்டியை திருப்பியதும் ஏற சொன்னார், ரோச் பார்க் படகு குலாம் அருகில் தெற்கில் இருந்து வடக்காக வண்டி TN 72 N 1422 என்ற அரசு பேருந்து தனது கணவர் மீது வண்டியுடன் மோதிவிட்டது, தனது கணவருக்கு தலையின் பின்பகுதி, காதின் பின்பகுதி, முகம் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது, தாடைக்கு கீழ் வீங்கிவிட்டது, மூக்கு, வாய் ஆகியவற்றில் இரத்தம் வந்தது, அந்த வழியாக வந்த ஒரு காரில் தன்னுடைய கணவரை தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சிசிச்சைக்காக கொண்டு சென்றேன், மருத்துவர் பரிசோதித்துவிட்டு வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள், தனக்கு மருத்துவமனையில் வைத்து மயக்கமாகிவிட்டதால் மருத்துவமனையிலேயே டிரிப்ஸ் ஏற்றினார்கள், மயக்கம் தெளிந்து பார்த்த போது தனது அம்மா மற்றும் போலிசார் அங்கு இருந்தார்கள், போலிசாருடன் நடந்ததை சொன்னேன், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான்,அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரியான முருகன்,அவர் சம்பவத்தன்று அதிவேகமாக பேருந்தை ஓட்டி வந்தார், போலிசார் தன்னை



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:28 +0530

விசாரித்தார்கள் என்றும்  சாட்சியம் அளித்துள்ளார்.

**6. கேள்விபட்ட சாட்சியான புகார்தாரரான அ.சா.2 திரு. ரித்திஷ் தனது முதல் விசாரணை சாட்சியத்தில்** தான் தற்போது கேரளாவில் குடியிருந்து வருகிறேன், நான் சம்பவ காலத்தில் தூத்துக்குடி தெர்மல் நகர் , கோவில் பிள்ளை நகரில் குடியிருந்து வந்தேன், அ.சா.1 தனது மகள் ஆவார், விபத்தில் இறந்து போன மோகன்  தன்னுடைய மருமகன் ஆவார், தனது மகளும்,மருமகனும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள், இருவரும் தூத்துக்குடியில் உள்ள ஜிபிஆர் ரிசோர்ஸ் பிரைவேட் லிமிடெட் –ல் வேலை பார்த்து வந்தார்கள், 2019–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24–ம் தேதி தனது மனைவி சாந்தி தனக்கு போன் மூலம் தன்னுடைய மருமகனுக்கு விபத்து நடந்ததாக போனில் தகவல் சொன்னார், தூத்துக்குடி பீச் ரோட்டில் படகு குலாம் அருகே விபத்து நடந்ததாக போனில் சொன்னார்கள், தனது மகளும்,மருமகனும் இரு சக்கர வாகனத்தில் வடக்கில் இருந்து தெற்காக போகும் போது அரசு பேருந்து இடித்துவிட்டதாக சொன்னார்கள், மருத்துவமனையில் தனது மருமனை பார்த்தேன், மருத்துவமனையில் தனது மருமகன் மோகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள், தனது மருமகனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து தங்களிடம் ஒப்படைத்தார்கள், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும்  சாட்சியம் அளித்துள்ளார்.

**7. கேள்விபட்ட சாட்சியான அ.சா.3 திருமதி. சாந்தி தனது முதல் விசாரணை சாட்சியத்தில்** தான் தற்போது கேரளா மாநிலம் அடுர் என்ற பகுதியில் குடியிருந்து வருகிறேன்,தான் கேரளாவில்  மருத்துவ கல்லூரியில் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறேன்,  தான் சம்பவ காலத்தில் தூத்துக்குடி தெர்மல் நகர் , கோவில் பிள்ளை நகரில் குடியிருந்து வந்தேன், அ.சா.1 தனது  மகள் ஆவார், அ.சா.2 தனது கணவர் ஆவார், தனது மகளும், மருமகனும் காதலித்து திருமணம் செய்து வந்தார்கள், ஜிபிஆர் ரிசோர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் கம்பெனியில் இருவரும் வேலை பார்த்து வந்தார்கள், காலை 8.00 மணிக்கு வேலைக்கு போய்விட்டு 6.00 மணிக்கு வேலை முடியும், 24–12–2019 அன்று இரவு சுமார் 7.00 அல்லது 7.20 மணிக்கு விபத்து நடந்ததாக சொன்னார்கள், தனது மகளும், மருமகனும் இரு சக்கர வாகனத்தில் அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு வரும் வழியில் ரோச் பூங்காவில் அமர்ந்து பேசிவிட்டு வரும்போது விபத்து நடந்ததாக சொன்னார்கள், பேருந்து மோதிவிட்டதாக சொன்னார்கள்,தான்



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:35 +0530

போகும் முன்னே அவர்களை மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள், வேறொரு போனில் இருந்து தனது மகள் தனக்கு போன் செய்தார், தனது மருமகனுக்கு முகம், தலை, காது, நிறைய இடத்தில் அடிப்பட்டிருந்தது, தான் போய் பார்க்கும் போது அவர் இறந்துவிட்டார், அதன் பிறகு தனது மகள் கொடுத்த புகார் மனுவில் தான் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்தேன், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**8. கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 திரு. முத்துமாலை தனது முதல் விசாரணை சாட்சியத்தில்** தான் தற்போது தூத்துக்குடி 3-ம் மைல் போலிஸ் குவார்ட்டர்ஸ் பணிபுரிந்து ஜேசிபி ஆபிரேட்டராக வேலை பார்த்து வருகிறேன், அ.சா.1 ஐ தனக்குத் தெரியாது, 24-12-2019 அன்று இரவு சுமார் 7.00 மணி அளவில் தான் ஹார்பரில் இருந்து வேலை முடித்து பீச் ரோட்டில் இருந்தேன், அப்போது விபத்து நடந்தது, ஒரு அரசு பேருந்து இரு சக்கர வாகன விபத்து நடந்தது, அரசு பேருந்து ஹார்பரில் இருந்து தூத்துக்குடி நோக்கி வந்து கொண்டிருந்தது, இரு சக்கர வாகனம் தூத்துக்குடியில் இருந்து ஹார்பருக்கு செல்லும் ரோட்டில் திரும்பும் போது விபத்து ஏற்பட்டது, அப்போது தான் அடிப்பட்ட நபரை காப்பாற்றி விடலாம் என்று அவரை தூக்கி வருகின்ற வண்டியில் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம், அதன் பின்பு அவர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன், அவருக்கு மண்டையில் அடிப்பட்டிருந்தது, கை, கால்களிலும் அடிப்பட்டிருந்தது, இரத்தம் வந்து கொண்டிருந்தது, விபத்தின் போது அவருடன் ஒரு பெண் இருந்தார், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**9. அ.சா.5 திரு. முத்துமாலை தனது முதல் விசாரணை சாட்சியத்தில்** தான் தற்போது தூத்துக்குடி கணேசன் நகர் 2-வது தெருவில் குடியிருந்து கார் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன், விபத்தில் இறந்து போன மோகன் தனது மகன் ஆவார், தன்னுடைய மகன் பிஎஷ்சி டிகிரி முடித்துவிட்டு தூத்துக்குடியில் உள்ள ஜிபிஆர் ஷிப்பிங் கம்பெனியில் டிரான்ஸ்போர்ட் பிரிவில் வேலை பார்த்து வந்தார், ஸ்ருதி தனது மருமகள் ஆவார், அவர்கள் இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டார்கள், அ.சா.1 ன் அப்பாவை தனக்குத் தெரியும், அ.சா.1 ன் அப்பாவான அ.சா.2 தனக்கு 24-12-2019 அன்று மாலை சுமார் 6.30 மணிக்கு போன் செய்து தன்னுடைய மருமகனுக்கு



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:44 +0530

விபத்து நடந்ததாக தகவல் சொன்னார், அ.சா.1 ஸ்ருதியும், அவரது கணவரும் வேலை முடிந்து வீட்டிற்கு செல்லும் போது ரோச் பார்க் அருகில் இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது விபத்து நடந்ததாக சொன்னார்கள், அரசு பேருந்து மோதியதாக சொன்னார்கள், மோகனுக்கு சீரியசாக இருப்பதாகவும், தன்னை உடனே மருத்துவமனைக்கு வர சொன்னார், தான் மருத்துவமனைக்கு சென்றேன், மோகன் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார், அதன் பிறகு அவரது உடலை பிரேத பரிசோதனை செய்து அ.சா.1, அ.சா.2 டம் ஒப்படைத்தார்கள், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. **கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 திரு. சுப்பையா தனது முதல் விசாரணை சாட்சியத்தில்** தான் தற்போது தூத்துக்குடி கணேஷ் நகர் வழி முனியசாமி நகர் 3 வது தெருவில் குடியிருந்து தச்சு வேலை செய்து வருகிறேன், தேதி, மாதம் ஞாபகம் இல்லை, கடந்த 2019 ஆம் ஆண்டு ஒரு நாள் இரவு சுமார் 07.00 மணி அளவில் தான் வேலைக்கு போய்விட்டு இரு சக்கர வாகனத்தில் வரும் போது பீச் ரோடு பூங்கா அருகே தான் நின்று கொண்டிருந்த போது ஒரு பையன் ஸ்கூட்டரில் ய டர்ன் மாதிரி திரும்பும் போது ஒரு அரசு டவுண் பஸ் வேகமாக வந்து இடித்துவிட்டது,அந்த பையனுக்கு தலையில் பலத்த அடிப்பட்டது, தாங்கள் உதவி செய்து காரில் ஏற்றி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. **மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை 1 அ.சா.7 திரு. ராஜேஷ் தனது முதல் விசாரணை சாட்சியத்தில்** தான் தற்போது மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணியாற்றி வருகிறேன், கடந்த 27.01.2020 ஆம் தேதி அன்று பிற்பகல் 04.30 மணி அளவில் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்த போது போது தூத்துக்குடி தெற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் பேரில் குற்ற எண் 776/2019 என்ற விபத்து வழக்கில் சம்பந்தப்பட்ட TN 69 BH 2738 என்ற எண்ணுள்ள யமஹா பிரேசிமம் வட்டார போக்குவரத்து கழக அலுவலக வளாகத்தில் வைத்து வாகனத்தினை விபத்து ஆய்வு செய்தேன், ஆய்வின் போது வாகனத்திற்கு கீழ்கண்ட சேதங்கள் காணப்பட்டன.1)



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:49 +0530

முன்புற சக்கரத்தின் மக்கார்ட் உடைந்து காணப்பட்டது.2) வாகனத்தின் முன்புற பாடி முழுவதுமாக சேதம் அடைந்து காணப்பட்டன, 3) வாகனத்தின் முகப்பு விளக்கு மற்றும் முன்புற இடது மற்றும் வலதுபுற இன்டிகேட்டர்கள் உடைந்து காணப்பட்டன,4) கேன்டில்பார் வளைந்து காணப்பட்டது, 5) முன்புறஎலக்டிரிக்கல் வயரிங் சேதம் அடைந்து காணப்பட்டன, 6) வாகனத்தின் வலதுபுறத்தில் சிராய்ப்புகளுடன் சேதம் அடைந்து காணப்பட்டன, 7) Speedo Meter Assembly உடைந்து காணப்பட்டன, 8) முன் இடது மற்றும் வலதுபுற போர்க் மற்றும் ஸ்டெம்ப் வளைந்து காணப்பட்டன, மேற்படி சேதாரத்தினால் வாகனம் இயக்கி பார்க்க கூடிய நிலையில் இல்லை, டயர்கள் நல்ல நிலையில் காணப்பட்டன, ஆய்வின் முடிவில் மேற்படி விபத்தானது வாகனத்தின் இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்று சான்றழித்தேன்,இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**12. மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை 1 அ.சா.8 திரு. உலகநாதன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில்** தான் மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணியாற்றி கடந்த 31.10.2024 அன்று பணி ஓய்பு பெற்று பணி ஓய்வில் உள்ளேன், கடந்த 31.12.2019 ஆம் தேதி மாலை 04.00 மணி அளவில் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணியில் இருந்த போது தூத்துக்குடி தெற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் பேரில் குற்ற எண் 776/2019, U/s.279, 304-A என்ற விபத்து வழக்கில் சம்பந்தப்பட்ட TN 72 N 1422 என்ற என்னுள்ள அரசு போக்குவரத்து கழக பேருந்தை 31.10.2019 அன்று 16.00 மணி அளவில் வட்டார போக்குவரத்து கழக அலுவலக வளாகத்தில் வைத்து வாகனத்தினை விபத்து ஆய்வு செய்தேன், ஆய்வின் போது வாகனத்திற்கு கீழ்கண்ட சேதங்கள் காணப்பட்டன, 1. வாகனத்தின் வலது பக்க முகப்பு விளக்கு, முன் வலது பக்க இன்டிகேட்டர் விளக்கு மற்றும் முன் காற்று தடுப்பாண் கண்ணாடி சேதம் அடைந்திருந்தது, முன் வலது பக்க பாடி ஒடுங்கிய நிலையில் உள்ளது, வாகத்தின் கால்தடை திறன் 68 சதவிகிதம் இருந்தது, கைத்தடைகள் இயங்கும் நிலையிலும், ஸ்டியரிங் மற்றும் டயர்கள் நல்ல நிலையிலும் இருந்தது, ஆய்வின் முடிவில் இந்த விபத்து வாகனத்தின் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:38:54 +0530

சான்று வழங்கினேன்,தான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுநரின் பெயர் முருகன், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** விபத்தில் இறந்து போன நபரின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் டாக்டர்.திரு. உதயகுமார் அ.சா.9 ஆக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான திரு. கிருஷ்ணகுமார் அ.சா.10 ஆக சாட்சியம் அளித்துள்ளார்.

**14. அ.சா.11 திரு. ஜெகதீசன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில்** தான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருச்செந்தூரில் போக்குவரத்து ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு 30.04.2023 அன்று பணி ஓய்வு பெற்று காயல்பட்டிணத்தில் குடியிருந்து வருகிறேன், ஆஜர் எதிரி முருகனை தனக்குத் தெரியும்,இதற்கு முன்பு தூத்துக்குடி நகர பணிமனையில் பணி நியமன அலுவலராக பணியில் இருந்த போது 24.12.22019 ஆம் தேதி TN 72 N 1422 தடம் எண்.57D பேருந்தின் ஓட்டுநராக M.முருகன் E.D.P.No.8304, நடத்துநராக N. கோமதி செல்வன் E.D.P. No.6350 என்பவர் பணியில் அமர்த்தப்பட்டனர் என சான்று வழங்கினேன், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. <u>அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>

அ.சா.1 திருமதி. ஸ்ருதி மூலமாக புகார் மனு அ.சா.ஆ.1 ஆகவும், அ.சா.7 திரு.ராஜேஷ் மூலமாக மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும், அ.சா.8 திரு.உலகநாதன் மூலமாக TN 72 N 1422 என்ற எண்ணுள்ள அரசு போக்குவரத்து கழக பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், அ.சா.9 டாக்டர். உதயகுமார் மூலமாக பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும், அ.சா.10 திரு. கிருஷ்ணகுமார் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும், அ.சா.11 திரு. ஜெகதீசன் மூலமாக பணி நியமன ஆணை அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டு, அதனுடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடித்து கொள்ளப்பட்டது.



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:00 +0530

16. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் பாதகமான சூழ்நிலை குறித்து எதிரியிடம் வினவுதல்</u>

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரியிடம் பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 15.04.2025ம் தேதி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை எனக் கூறி கொண்டார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

17. <u>தீர்வுக்குரிய பிரச்சனை :</u>

**இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட இதச பிரிவுகள் 279, 304(A) ன் படியுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

18. <u>தீர்வு :</u>

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. கற்றறிந்த அரசு தரப்பு உதவி வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீதான வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டியது அவசியம் என்றும் வாதிட்டார்.

**19.** எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டு சாட்சிகள் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. எனவே, எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

**20.** அரசு தரப்பு வழக்கின் படி "கடந்த 24.12.2019ம் தேதி 18.00 மணி அளவில் சாட்சி 1 ஸ்ருதி தனது கணவரான இவ்வழக்கில் காயம்பட்டு இறந்துபோன மோகன் என்பவருடன் வேலை முடித்து TN69 BH 2738 YAMAHA FASINO என்ற இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு செல்வதற்காக தூத்துக்குடி தெற்கு பீச் ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக சென்று ரோச் பார்க் அருகில் உள்ள குடையின் அருகில் வண்டியை



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:05 +0530

நிறுத்தி அங்கு அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தவர்கள் பின்பு சுமார் 19.00 மணி அளவில் மோகன் சிக்கன் வாங்கிவிட்டு வீட்டிற்கு செல்வோம் என்று சொல்லி வண்டியில் தெற்கு போய் வடக்காக U TURN போட்டு திரும்பும் போது படகு குழாம் அருகில் தெற்கிலிருந்து வடக்காக வந்த TN 72 N 1422 புதிய துறைமுகத்தில் இருந்து தூத்துக்குடிக்கு செல்லும் அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் முருகன் அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மோகனின் இருசக்கர வாகனத்தில் மோதியதில் மோகனுக்க இடது காது அருகில் சிதைந்த காயம், இடது கழுத்தில் சிராய்ப்பு காயம், இடது கழுத்தில் வீக்க காயம், இடத கண்ணுக்கு கீழ் இரத்தக்காயம், நாடியில் இரத்தக் காயம், கீழ் உதடு அருகில் இரத்த காயம், வலது கை மூட்டிக்கு கீழ் சிராய்ப்பு காயம், தலையின் பின்புறம் இரத்த காயத்தை உண்டுபண்ணினார்" என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

**21.** இந்த வழக்கில் விபத்தில் இறந்துபோன மோகனின் மனைவி ஸ்ருதி அ.சா.1 ஆகவும், அவரின் மாமனார் ரித்திஷ் அ.சா.2 ஆகவும் சாட்சியம் அளித்துள்ளனர். புகார்தாரரான அ.சா.1 திருமதி. ஸ்ருதி தனது சாட்சியத்தில் "நான் சம்பவத்தின் போது தூத்துக்குடி மாவட்டம் கோவில் பிள்ளை தெருவில் வசித்து வந்தேன். எனது கணவர் இறப்பிற்கு பின்பு தற்போது எனது தாய், தந்தையாருடன் கேரளாவில் வசித்து வருகிறேன். எனது கணவருக்கு சொந்த ஊர் திருநெல்வேலி. நானும், மோகனும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம். நானும், எனது கணவர் மோகனும் தூத்துக்குடி ல் உள்ள ஜிபிஆர் ரிசோர்சஸ் என்ற பிரைவேட் கம்பெனியில் வேலை பார்த்தோம். நான் அசிஸ்டன்ட் பிசினஸ் கோ ஆர்டினேட்டர் ஆகவும், எனது கணவர் அட்மின் பிரிவிலும் வேலை பார்த்து வந்தோம். கடந்த 2019-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் தேதி எங்கள் அலுவலகத்தில் இருந்து எங்களது வீடு இருந்த கோவில்பிள்ளை நகருக்கு மாலை 6.00 மணிக்கு tN 69 BH 2738 என்ற யமஹா பேசினோ என்ற இரு சக்கர வாகனத்தில் கிளம்பினோம். பீச் சோட்டில் கொஞ்ச நேரம் நிப்பாட்டி இருந்தோம். இரவு 7.00 மணி அளவில் சிக்கன் வாங்கலாம் என்று வடக்கில் இருந்து தெற்காக செல்லக்கூடிய ரோட்டில் திரும்பி சிக்கன் வாங்குவதற்காக இருவரும் சென்றோம். என்னை ரோட்டில் நிற்க சொல்லிவிட்டு வண்டியை திருப்பியதும் ஏற சொன்னார். ரோச் பார்க் படகு குலாம் அருகில் தெற்கில் இருந்து வடக்காக வண்டி TN 72 N 1422



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:10 +0530

என்ற அரசு பேருந்து எனது கணவர் மீது வண்டியுடன் மோதிவிட்டது. எனது கணவருக்கு தலையின் பின்பகுதி, காதின் பின்பகுதி, முகம் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது. தாடைக்கு கீழ் வீங்கிவிட்டது. மூக்கு, வாய் ஆகியவற்றில் இரத்தம் வந்தது. அந்த வழியாக வந்த ஒரு காரில் என்னுடைய கணவரை தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சிசிச்சைக்காக கொண்டு சென்றேன். மருத்துவர் பரிசோதித்துவிட்டு வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனக்கு மருத்துவமனையில் வைத்து மயக்கமாகிவிட்டதால் மருத்துவமனையிலேயே டிரிப்ஸ் ஏற்றினார்கள். மயக்கம் தெளிந்து பார்த்த போது எனது அம்மா மற்றும் போலிசார் அங்கு இருந்தார்கள். போலிசாருடன் நடந்ததை சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரியான முருகன். அவர் சம்பவத்தன்று அதிவேகமாக பேருந்தை ஓட்டி வந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்." என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>22. சம்பவ இடம்</u>**

சம்பவ இடம் குறித்து அ.சா.1 ன் சாட்சியத்தை கவனமுடன் காண்கையில் "கடந்த 2019-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் தேதி எங்கள் அலுவலகத்தில் இருந்து எங்களது வீடு இருந்த கோவில்பிள்ளை நகருக்கு மாலை 6.00 மணிக்கு tN 69 BH 2738 என்ற யமஹா பேசினோ என்ற இரு சக்கர வாகனத்தில் கிளம்பினோம். பீச் சோட்டில் கொஞ்ச நேரம் நிப்பாட்டி இருந்தோம். இரவு 7.00 மணி அளவில் சிக்கன் வாங்கலாம் என்று வடக்கில் இருந்து தெற்காக செல்லக்கூடிய ரோட்டில் திரும்பி சிக்கன் வாங்குவதற்காக இருவரும் சென்றோம். என்னை ரோட்டில் நிற்க சொல்லிவிட்டு வண்டியை திருப்பியதும் ஏற சொன்னார். ரோச் பார்க் படகு குலாம் அருகில் தெற்கில் இருந்து வடக்காக வண்டி TN 72 N 1422 என்ற அரசு பேருந்து எனது கணவர் மீது வண்டியுடன் மோதிவிட்டது." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**23.** இந்த வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.6 திரு. சுப்பையாவின் முதல் விசாரணை சாட்சியத்தை கவனமுடன் காண்கையில் "கடந்த 2019 ஆம் ஆண்டு ஒரு நாள் இரவு சுமார் 07.00 மணி அளவில் நான் வேலைக்கு போய்விட்டு இரு சக்கர வாகனத்தில் வரும் போது பீச் ரோடு பூங்கா



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:16 +0530

அருகே நான் நின்று கொண்டிருந்த போது ஒரு பையன் ஸ்கூட்டரில் யு டர்ன் மாதிரி திரும்பும் போது ஒரு அரசு டவுண் பஸ் வேகமாக வந்து இடித்துவிட்டது. அந்த பையனுக்கு தலையில் பலத்த அடிப்பட்டது." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**24.** மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 முத்துமாலை, த/பெ. செல்வராஜ் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் " 24-12-2019 அன்று இரவு சுமார் 7.00 மணி அளவில் நான் ஹார்பரில் இருந்து வேலை முடித்து பீச் ரோட்டில் இருந்தேன். அப்போது விபத்து நடந்தது. ஒரு அரசு பேருந்து இரு சக்கர வாகன விபத்து நடந்தது. அரசு பேருந்து ஹார்பரில் இருந்து தூத்துக்குடி நோக்கி வந்து கொண்டிருந்தது. இரு சக்கர வாகனம் தூத்துக்குடியில் இருந்து ஹார்பருக்கு செல்லும் ரோட்டில் திரும்பும் போது விபத்து ஏற்பட்டது." என்று சம்பவ இடமான ஹார்பரிலிருந்து தூத்துக்குடி செல்லும் ரோட்டில் விபத்து நடந்த இடமாக சாட்சியம் அளித்துள்ளார்.

**25.** மேற்படி புகார்தாரரான அ.சா.1, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.6 சாட்சியத்திலிருந்து சம்பவ இடமானது அரசு தரப்பு வழக்கின்படி வடக்கிலிருந்து தெற்காக துறைமுகத்திலிருந்து தூத்துக்குடி செல்லும் ரோட்டில் விபத்து சம்பவமானது நடைபெற்றுள்ளது என்பதும், சம்பவ இடமும் அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.6 சாட்சியங்களின் மூலம் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>26. எதிரி மற்றும் வாகனத்தின் அடையாளம்</u>

சம்பவ இடமானது அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.6 சாட்சிகளின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் சம்பவ தினத்தில் TN 72 N 1422 அரசு பேருந்தை ஓட்டி வந்து எதிரி மேற்படி விபத்தை ஏற்படுத்தினாரா என்று அரசு தரப்பு சாட்சி சான்றாவணங்கள் வெகு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. சம்பவம் குறித்து புகார்தாரரான அ.சா.1ன் சாட்சியத்தை கவனமுடன் காண்கையில் "கடந்த 2019-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் தேதி எங்கள் அலுவலகத்தில் இருந்து எங்களது வீடு இருந்த கோவில்பிள்ளை நகருக்கு மாலை 6.00 மணிக்கு tN 69 BH 2738 என்ற யமஹா பேசினோ என்ற இரு சக்கர வாகனத்தில் கிளம்பினோம். பீச் சோட்டில் கொஞ்ச நேரம் நிப்பாட்டி இருந்தோம். இரவு 7.00 மணி அளவில் சிக்கன் வாங்கலாம் என்று வடக்கில் இருந்து தெற்காக செல்லக்கூடிய ரோட்டில் திரும்பி சிக்கன் வாங்குவதற்காக



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:22 +0530

இருவரும் சென்றோம். என்னை ரோட்டில் நிற்க சொல்லிவிட்டு வண்டியை திருப்பியதும் ஏற சொன்னார். ரோச் பார்க் படகு குலாம் அருகில் தெற்கில் இருந்து வடக்காக வண்டி TN 72 N 1422 என்ற அரசு பேருந்து எனது கணவர் மீது வண்டியுடன் மோதிவிட்டது." என்றும், அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரியான முருகன். அவர் சம்பவத்தன்று அதிவேகமாக பேருந்தை ஓட்டி வந்தார் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் போது, "அரசு பேருந்தின் வண்டி எண் போலிசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் இல்லை. சம்பவ இடத்திலேயே நான் பார்த்தேன். " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**27.** கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது அ.சா.1 கண்ணுற்ற சாட்சி இல்லை என்றும், சம்பவ இடத்தில் அவர் கிடையாது என்றும் வாதிட்ட நிலையில் இந்த வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், "**இந்த வழக்கில் புகார்தாரர் ஸ்ருதி யார் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். இறந்து போன மோகன் என்பவரின் மனைவி என்று சொல்லி அவர் சம்பவத்தின் போது உடன் போனார்"** என்றும் சாட்சியம் அளித்துள்ளதை காண்கையில் அ.சா.1ன் சாட்சியத்தையும், அ.சா.1 சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் இருந்துள்ளார் என்பதும் அ.சா.6ன் சாட்சியத்தின் மூலமாக உறுதிப்படுத்துகிறது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**28.** மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "என்னையும், எனது கணவரையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற வாகனத்தின் எண் மற்றும் அந்த நபரின் பெயர் எனக்குத் தெரியாது என்றால் தெரியும். அப்போது தான் கலெக்டரின் வாகனம் அந்த வழியாக சென்றது. கலெக்டரின் வாகனத்தில் தான் எங்களை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை புகார் மனுவிலோ, போலிசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்." என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி சங்கதிகள் குறித்து கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 அரசு பேருந்தில் வந்த நடத்துநர் மற்றும் பயணிகள் எத்தனை பேர் வந்தார்கள் என்ற விபரம் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான், அந்த நபரை காப்பாற்றுவதில் தான் நாங்கள் கவனத்தில் இருந்தோம். இறந்து போன நபரின் மனைவிக்கு எந்தவித காயமும்



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:26 +0530

இல்லை என்றால் அதை நான் பார்க்கவில்லை. இறந்து போன நபரை யாருடைய காரில் ஏற்றி அனுப்பினோம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான், ஆனால் உயர் அதிகாரியின் கார்." என்று சாட்சியம் அளித்து அ.சா.1 ன் சாட்சியத்தை அ.சா.6 ன் சாட்சியம் உறுதிப்படுத்துவதாகவும், அ.சா.1 சம்பவ தினத்தில் சம்பவ நேரத்தில் சம்பசவ இடத்தில் இருந்துள்ளார் என்பதும் அ.சா.1 இந்த வழக்கின் கண்ணுற்ற சாட்சி என்பதும் அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரிய வருகின்றது.

**29.** விபத்து வழக்குகளில் விபத்து சம்பவத்தை ஏற்படுத்திய வாகனத்தின்அடையாளம் மற்றும் எதிரியின் அடையாளம் நிரூபிக்கப்பட வேண்டியது அவசியம் என்ற நிலையில் இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 ன் முதல் விசாரணை சாட்சியத்தில் " ரோச் பார்க் படகு குலாம் அருகில் தெற்கில் இருந்து வடக்காக வண்டி TN 72 N 1422 என்ற அரசு பேருந்து எனது கணவர் மீது வண்டியுடன் மோதிவிட்டது. அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரியான முருகன்." என்று எதிரியின் அடையாளம் மற்றும் வாகனத்தின் அடையாளம் குறித்து அ.சா.1 ஆல் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், எதிரியின் அடையாளம் மற்றும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் அடையாளம் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**30.** மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த அ.சா.13 திரு. ஜெகதீசன் தனது சாட்சியத்தில் "இதற்கு முன்பு தூத்துக்குடி நகர பணிமனையில் பணி நியமன அலுவலராக பணியில் இருந்த போது 24.12.22019 ஆம் தேதி TN 72 N 1422 தடம் எண்.57D பேருந்தின் ஓட்டுநராக M.முருகன் E.D.P.No.8304, நடத்துநராக N. கோமதி செல்வன் E.D.P. No.6350 என்பவர் பணியில் அமர்த்தப்பட்டனர் என சான்று வழங்கினேன். **(பணி நியமன ஆணை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** " என்று சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், சம்பவத்தை ஏற்படுத்திய வாகனம் TN 72 N 1422 என்ற அரசு பேருந்து என்பது அ.சா.1 ன் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், அ.சா.11 ன் சாட்சியமானது அ.சா.1 ன் சாட்சியத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்தும், அ.சா.1, அ.சா.4, அ.சா.6, அ.சா.11 மற்றும் அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.9 ஆவணங்களின் மூலம் எதிரி TN 72 N 1422 என்ற அரசு பேருந்தை ஓட்டி



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:31 +0530

வந்து சம்பவ தினத்தில் சம்பவ இடத்தில் விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதும், விபத்தை ஏற்படுத்திய எதிரியின் அடையாளமும் வாகனத்தின் அடையாளமும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>31. எதிரியின் முரட்டுத்தனமான அல்லது அசட்டையான செய்கை (rash or negligent)</u>**

இதச பிரிவு 304(A) ஐ கவனமுடன் காண்கையில் "

| |
|---|
| **Causing death by negligence**<br><br>**"Whoever causes the death of any person by doing any rash or negligent act not amounting to culpable homicide, shall be punished with imprisonment of either description for a term which may extend to two years, or with fine, or with both."** |

" என்று காணப்படுகின்றது.

**32.** கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது இந்த வழக்கில் விபத்தானது எதிரி ஓட்டி வந்த வாகனத்தால் ஏற்படவில்லை என்றும், அடையாளம் தெரியாத வாகனத்தால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் வாதிட்ட நிலையில், அ.சா.1, அ.சா.4, அ.சா.6 சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரி சம்பவ தினத்தில் மேற்படி TN 72 N 1422 வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி ஊள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி விபத்தானது எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளதா என்று சாட்சி சான்றாவணங்கள் வெகு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**33.** அ.சா.ஆ.1 ஆவணமாபன புகார் மனுவை கவனமுடன் காண்கையில் "இரவு சுமார் 7 மணி அளவில் எனது கணவர் Chicken வாங்கிவிட்டு வீட்டிற்கு செல்வோம் என்று சொல்லி என்னை குடை பிட்டில் நிக்க சொல்லிவிட்டு வண்டியை திருப்பி வருகிறேன் என்று சொல்லி, வண்டியில் தெற்கு போய் வடக்காக U turn போட்டு திருப்பும் போது தெற்கில் இருந்து வடக்காக வந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த முடிவைத்தானேந்தல் மேலப்பிள்ளையார் கோவில் தெரு, முத்துவீரப்பன் பிள்ளை மகன் முருகன் என்பவர் TN 72 N 1422 புதிய துறைமுகத்தில் இருந்து



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:36 +0530

தூத்துக்குடிக்கு செல்லும் அரசு பேருந்தை அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எனது கணவரின் இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டார். " என்று காணப்படும் நிலையில் மேற்படி சங்கதிகள் குறித்து அ.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்தை கவனமுடன் காண்கையில், "அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரியான முருகன். சம்பவத்தன்று அதிவேகமாக பேருந்தை ஓட்டி வந்தார்." என்று சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், அ.சா.1 கண்ணுற்ற சாட்சியாக உள்ள நிலையிலும், புகார் மனுவில் கண்ட சங்கதிகளானது அ.சா.1ன் மூலமாக உறுதி செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**34.** மேலும், இந்த விபத்தில் இறந்து போன நபருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து பிரேத பரிசோதனை செய்த அரசு மருத்துவர் அ.சா.9ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ. 4 ஆவணமான பிரேத பரிசோதனை அறிக்கையை கவனமுடன் காண்கையில் "கடந்த 25.12.2019 ஆம் ஆண்டு 10.45 மணிக்கு தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது தூத்துக்குடி தெற்கு காவல் நிலைய குற்ற எண்.776/2019, U/s.279, 304-A அன்று சுமார் 24 வயது மதிக்கத்தக்க மோகன் என்பவரை உதவி ஆய்வாளர் அவர்களின் அனுமதி கடிதத்தின் பேரில் முதல் நிலைக் காவலர் செல்வராஜா 1784 என்பவர் வழக்கில் சம்பந்தபட்ட பிரேத விசாரணை செய்யும் படியாக கொண்டு வந்தார். பிரேத பரிசோதனை 25.12.2019 அன்று காலை 10.55 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. ஆய்வில் உடல் முழுவதும் பிண விறைப்பு தன்மை காணப்பட்டது. உடல் மிதமான புரதத்துடனும், கை, கால் விரல்கள் நீல நிறத்திலும் காணப்பட்டன. கீழ்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன. 1) 7 Cm X 1 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் முன்பக்க தலையின் மத்திய பகுதியில் காணப்பட்டது. 2) 3 Cm X 1 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் முன்பக்க தலையின் மத்திய பகுதியில் காணப்பட்டது. காயமானது காயம் எண்.1 ல் இருந்து 1 செ.மீ கீழே காணப்பட்டது. 3) 3 Cm X 1 Cm X தசை அளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது கண்புருவத்திற்கு மேலே காணப்பட்டது. 4) 2 Cm X 2 Cm அளவுடைளய சிராய்ப்பு காயம் மூக்கின் மத்திய பகுதியில் காணப்பட்டது. 5) 4 Cm X 2 Cm X எலும்பு அளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது காதின் பின்புறத்தில் காணப்பட்டது. 6) 3 Cm X 2 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் வலது கண்ணின்



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:41 +0530

வெளிப்புற பகுதியில் காணப்பட்டது. 7) 5 Cm X 3 Cm X எலும்பு அளவு ஆழமுடைய கிழிந்த காயம் தாடையின் மத்திய பகுதியில் காணப்பட்டது. அதனை பகுப்பாய்வு செய்ததில் தாடை எலும்பு முறிந்து காணப்பட்டது. 8) 4 Cm X 1 Cm X தசை அளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது கீழ் உதட்டின் கீழே காணப்பட்டது. 9) 6 cm X 4 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் இடது பக்க கழுத்து பகுதியில் காணப்பட்டது. 10) 5 cm X 3 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் முன்பக்க கழுத்தின் கீழ்புறத்தில் காணப்பட்டது. 11) 18 cm X 12 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் வலது தோள்பட்டையின் பின்புறத்தில் காணப்பட்டது. 12) 6 cm X 4 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் வலது பக்க கழுத்து பகுதியில் காணப்பட்டது. 13) 4 cm X 3 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் வலது பக்க வயிற்றின் கீழ்ப்பகுதியின் பின்புறத்தில் காணப்பட்டது. 14) 6cm X 4 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் வலது முன்னங்கையின் மேற்பகுதியில் காணப்பட்டது. 15) 2 cm X 2 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் வலது கை முட்டியில் காணப்பட்டது. 16) பல்வேறு அளவிலான வடிவுகளான சிராய்ப்பு காயமும் வலது கையின் பின்புற பகுதியில் காணப்பட்டது. 17) 5 cm X 2 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் வலது கீழ்த்தொடையின் உட்பகுதியில் காணப்பட்டது. 18) 4 cm X 3 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் வலது மேல் காலின் உட்பகுதியில் காணப்பட்டது. 19) 3 cm X 3 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் இடது தொடையின் முன்பகுதியின் மத்தியில் காணப்பட்டது. 20) 3 cm X 2 Cm அளவுடைய சிராய்ப்பு காயம் இடது மேல் காலில் வெளிப்புற பகுதியில் காணப்பட்டது. 21) 6 cm X 2 Cm X எலும்பு அளவு ஆழமுடைய கிழிந்த காயம் கபாலத்தின் உச்சியின் பின்புற பகுதியில் காணப்பட்டது. 22) 8 cm X 3 Cm X எலும்பு அளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது பக்க கபாலத்தின் உச்சி மற்றும் பின்பகுதியில் காணப்பட்டது. கபாலத்தின் கபால எலும்பு, மூளையை சுற்றிய ஜவ்வு ஆகியவற்றை பகுப்பாய்வு செய்ததில் 20 செ.மீ X 14 செ,மீ அளவுடைய கன்றிய காயம் கபாலத்தின் மத்திய பகுதியிலும், மத்தியின் உச்சி பகுதியிலும்,இடது பக்க கபாலத்தின் பின்பகுதியிலும் காணப்பட்டது. 10 செ.மீ நீளமான எலும்பு முறிவு இடது பக்க உச்சி மற்றும் பின்பக்க கபால எலும்பில் காணப்பட்டது. பெருமூளை மற்றும் சிறுமூளையை சுற்றிய ஜவ்வின் மத்திய ஜவ்வின் மேல்பகுதியிலும், அதன் அடிப்பகுதியிலும் பரவலாக இரத்தம் கசிந்து காணப்பட்டது. இடது பக்க கபாலத்தின் அடிப்பகுதி எலும்பு ஒடிந்து காணப்பட்டது."



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:46 +0530

என்று காணப்படுகிறது.

**35.** மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கையிலிருந்து அவருக்கு ஏற்பட்ட 1 முதல் 20 வரையிலான காயங்கள் சிராய்ப்பு காயங்களாக காணப்படும் நிலையில் விபத்தின் போது எதிரி தனது வாகனத்தை உடனடியாக நிறுத்த முடியாத அளவிற்கு அதிவேகமாக வந்துள்ள காரணத்தினால் தான் இறந்து போன நபருக்கு அவரது உடல் முழுவதும் மேற்கண்ட சிராய்ப்பு காயங்கள் காணப்படுவதை அறிய முடிகின்றது.

**36.** மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்தும் அ.சா.1 மற்றும் அ.சா.9 சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் அ.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் சம்பவ தினத்தில் சம்பவ இடத்தில் எதிரி TN 72 N 1422 என்ற அரசு பேருந்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி இறந்து போன நபரான மோகன் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தி உள்ளார் என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**37.** மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து சம்பவ தினத்தில் சம்பவ இடத்தில் எதிரி TN 72 N 1422 என்ற அரசு பேருந்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி இறந்து போன நபரான மோகனுக்கு இறப்பை ஏற்படுத்தி உள்ளார் என்பது அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ. 9 வரையிலான ஆவணங்களின் மூலமும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**38.** **<u>முடிவு :</u>**

எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 304(A)ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று தீர்மானிக்கப்பட்டு, எதிரி இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்றவாளிகள் என கு.வி.மு.ச. 248(2) ன்படி இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**39.** இறுதியாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து குவிமுச பிரிவு 255(2)ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டு, தண்டனை குறித்து எதிரியிடம் போதுமான கால அவகாசம் கொடுத்து வினவிய போது, எதிரி தனக்கு 60 வயது ஆகிவிட்டது என்று கூறி தண்டனையை குறைத்து தரும்படி



SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:39:50 +0530

கோரினார்.

**40.** எதிரி மீதான இதச பிரிவு 304(A)ன் படியான குற்றத்திற்கு ஆறு மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனையும், ரூ. 5000/- அபராதமும், அபராதத்தை கட்ட தவறினால் ஒரு மாதம் சாதாரண சிறைத்தண்டனையும் விதிக்கப்படுகிறது.

**41.** இதச பிரிவு 279 ன் கீழான குற்றத்திற்கான கூறுகள் இதச பிரிவு 304(A) ன் கீழ் உள்ளடங்கி வருவதால் இதச பிரிவு 279 ன் கீழான குற்றத்திற்கு தனியாக தண்டனை வழங்கப்படவில்லை.

**42.** இவ்வழக்கின் தன்மை மற்றும் தீவிரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிரிக்கு பிரிவு 360 குவிமுச படியான பலன்களை வழங்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

43. வழக்கு சொத்துக்கள் :

இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கு சம்பந்தமாக சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து சம்பந்தமாக உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ம் நாள் செவ்வாய்க்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:40:04 +0530

**ஒப்பம்.ப. சுமதி,**
**நீதித்துறை நடுவர் எண் 1,**
**தூத்துக்குடி.**

**இணைப்பு :**
**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

அ.சா.1 – திருமதி. ஸ்ருதி (நிகழ்நிலை புகார்தாரர்)

அ.சா.2 – திரு. ரித்திஷ்

அ.சா.3 – திருமதி. சாந்தி

அ.சா.4 – திரு. முத்துமாலை

அ.சா.5 – திரு. முத்துமாலை

அ.சா.6 – திரு. சுப்பையா

அ.சா.7 – திரு. ராஜேஷ்

அ.சா.8 – திரு. உலகநாதன்

அ.சா.9 – டாக்டர்.திரு. உதயகுமார்

அ.சா.10 – திரு. கிருஷ்ணகுமார் (காவல் ஆய்வாளர்)

அ.சா.11 – திரு. ஜெகதீசன்

**அரசு தரப்பில் குறிக்கப்பட்ட சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.12.2019 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 27.01.2020 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.3 | 31.12.2019 | TN 72 N 1422 என்ற எண்ணுள்ள அரசு போக்குவரத்து கழக பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 25.12.2019 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 25.12.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 24.12.2019 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 24.12.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | 25.12.2019 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 24.12.2019 | பணி நியமன ஆணை |

**அரசு தரப்பில் குறிக்கப்பட்ட சான்றுபொருட்கள் :** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்கள் :** இல்லை

SUMATHI Digitally signed by SUMATHI Date: 2025.04.22 15:40:00 +0530

**நீதித்துறை நடுவர் எண் 1,**
**தூத்துக்குடி.**

**குறிப்பு**

1) விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2) சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

4) எதிரிக்கு தீர்ப்பின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

5) அபராதத் தொகை ரூ. 5,000/– எதிரியால் செலுத்தப்பட்டது.

Uploaded byS.Muthuselvi, Typist